# புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU)

தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி

புதுச்சேரி.

உலகத் தமிழ்ப் பேரவை

புதுச்சேரி.

## நவீன கவிதை இலக்கியப் பயிற்சி அளிப்பதற்காக ஏற்படுத்தப்படும் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU)

Scanned by CamScanner

**தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, புதுச்சேரி**

**மற்றும்**

**உலகத் தமிழ்ப் பேரவை**

**இடையே**

**நவீன கவிதை இலக்கியப் பயிற்சி அளிப்பதற்காக ஏற்படுத்தப்படும் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU)**

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மார்ச்சு 2023 - இல் தாகூர் அரசு கலை அறிவியல் கல்லூரி முதல்வர் **முனைவர் சசிகாந்த தாஸ்** அவர்களால் முன்மொழியப்பட்டு **முனைவர் க. ரேவதி, முனைவர் ஆ. விஜயராணி** ஆகியோர் கல்லூரி பிரதிநிதிகளாகவும்,

புதுச்சேரி, உலகத்தமிழ்ப் பேரவையின் சார்பில் **தலைவர் முனைவர் நிகழ்கி கிருட்டிணமூர்த்தி, செயலர் கலைமாமணி முனைவர் ஔவை நிர்மலா** ஆகியோர் பிரதிநிதிகளாகவும் இருந்து ஏற்படுத்தப்படுகிறது.

இவ்விரு அமைப்பினரும் ஒரு பொதுக் கருத்தின் அடிப்படையில் இணைந்து செயல்பட தீர்மானிக்கப் பெறுகிறது. இரு அமைப்பினருக்கும் எந்த வகையான கருத்து முரண்பாடுகளும் ஏற்படாதவாறும் அவ்வாறு முரண்பாடு ஏற்படும்போது அவ்வப்போது பேசித்தீர்த்துக்கொண்டு சுமுகமாகச் செயல்படுவது எனவும் முடிவு செய்யப் பெறுகிறது.

**இனி, புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்துவது தொடர்பாக வழிகாட்டு நெறிமுறைகள் வரையறுத்துக் கொள்ளப்படுகிறது.**

**பகுதி – 1 புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ள உள்ள நிறுவனங்களின் சுருக்கமான விவரம்**

**புதுச்சேரி** மாநிலத்தில் **தாகூர் அரசு கலை அறிவியல் கல்லூரி** ஒரு முதன்மையான கல்வி நிறுவனமாக இயங்கி வருகிறது. 1961-ஆம் ஆண்டு பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் பொற்கரங்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, கல்லூரி இன்று பரந்து விரிந்த ஓர் ஆலமரமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. 1986-87-ஆம் கல்வியாண்டிலிருந்து புதுவைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப் பெற்று இயங்கி வருகிறது. அதற்கு முன் சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்திருந்தது. 2015-ஆம் ஆண்டில் தேசியத் தரக்கட்டுப்பாட்டு நிறுவனத்தன் (NAAC) 'B' அங்கீகாரம் பெற்றுள்ளது.

நவீன அறிவியல் வளர்ச்சியை மாணவர்களுக்கு அறிவுறுத்தும் வகையிலும் ஆன்மீக விழுமியங்களை வலியுறுத்தும் நோக்கிலும் இக்கல்லூரி செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

புதுச்சேரியில் இயங்கி வரும் **உலகத் தமிழ்ப் பேரவை** தமிழ் கூறும் நல்லுலகில் பல்வேறு இலக்கியப் பணிகளையும் சமுதாயப் பணிகளையும் செய்து வருகிறது. நவீன கவிதை வடிவங்களான ஹைக்கூ கவிதை, சென்ரியு கவிதை, லிமரைக்கூ கவிதை, நவீன நாடகங்கள் முதலான படைப்புத் தளங்களில் தமக்கென ஒரு தனி இடத்தைப் பிடித்து வருகிறது.

மூன்றடிகள் கொண்ட ஹைக்கூ, நகைச்சுவை உணர்வு மேலோங்கி இருக்கும் சென்ரியு, வேடிக்கை, வினோதம், நகைச்சுவை முதலிய உணர்வுடன் இருக்கும்



Scanned by CamScanner

லிமரைக்கூ இவற்றுடன் ஹைபுன், லிபுன், குறட்கூ, சீரக்கவிதை முதலான கவிதை வடிவங்களாக வளர்த்து வருகிறது.

உலகத் தமிழ்ப் பேரவை இலக்கியப் பணிபுரிந்து வருபவர்களுக்கும் சமூகப் பணி புரிந்து வருபவர்களுக்கும் விருதுகள் வழங்கிச் சிறப்பித்து வருகிறது.

### பகுதி – 2: புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நோக்கம்

- புதுக் கவிதையின் வளர்ச்சியடைந்த கவிதை வடிவங்களான ஹைக்கூ, சென்ரியு, லிமரைக்கூ முதலான கவிதைகள் படைக்கப் பயிற்சியளித்தல்
- இலக்கியப் படைப்பாளர்களின் வாழ்க்கை வரலாற்றை நாடகங்களாகப் படைத்தளித்தல்
- செவ்வியல் மொழியாகிய தமிழின் சிறப்பை எடுத்துரைத்தல், இளைய தலைமுறையினருக்கு அறிவுறுத்துதல்
- மாணவர்களிடையே ஆய்வு மனப்பான்மையை வளர்க்க பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்துதல்
- தனித்திறன்களை மாணவர்களிடையே வளர்க்குமுகமாகக் கலைத்திறன் பயிற்சிகளை வழங்குதல்
- தமிழ் இலக்கியத்தின் தனித்தன்மைகளை இளைஞர்களிடையே கொண்டு சேர்த்தல்.

### பகுதி – 3: இரு நிறுவனங்களின் பொறுப்பு மற்றும் முன்மாதிரிச் செயல்பாடு

**தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி**

1. நவீன கவிதைகளான புதுக்கவிதை, ஹைகூ, சென்ரியு, லிமரைக்கூ முதலானவற்றை எழுதப் பயிற்சியளித்தல்
2. பயிற்சிகள் வழங்குவதற்காக கல்லூரிக் கருத்தரங்கக் கூடத்தைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதி வழங்குவதன் மூலம், மாணவர்களைப் பங்கு கொள்ளச் செய்து இணைந்து செயல்படுதல்.
3. இரு நிறுவனங்களின் செயல்பாடுகளும் ஒரு முன் மாதிரியாக விளங்க வகை செய்தல், சமூகப் பொறுப்புணர்ந்து அதற்கேற்ற திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்துதல்.

**உலகத் தமிழ்ப் பேரவை**

1. பேரவையின் அங்கத்தினர்கள் மாணவர்களுக்கு நவீன கவிதைப் பயிற்சியளிக்க அறிவுக்கொடையை வழங்குதல்
2. மாணவர்களின் படைப்புகளை நூல்களாகவோ இதழ்களின் மூலம் வெளியிடவோ வழி வகை செய்தல்.
3. அவ்வப்போது மாணவர்களைச் சந்தித்து கலந்துரையாடுவது, இதன் மூலம் மாணவர்களின் ஒழுக்கம் மேம்பட வழிவகை செய்வது, தம் பட்டறிவை எடுத்துக் கூறி நெறிப்படுத்துதல்.
4. மாணவர்களை எழுத்தாளர்களாக உருவாக்குவதற்கான முயற்சி மேற்கொள்ளுதல்.

### பகுதி – 4: புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பகுதிகள்

1. **பயிற்சி மற்றும் சான்றிதழ்:** தாகூர் அரசு கலை அறிவியல் கல்லூரி, உலகத் தமிழ்ப் பேரவை இணைந்து நவீன கவிதைப் பயிற்சியளித்து, பயிற்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ் வழங்குதல்.



Scanned by CamScanner

2. **தகவல் பரிமாற்றம்:** நவீன கவிதைப் படைப்புகள் அண்மைக் காலப் படைப்பாளர்களின் படைப்புகள், படைப்புகளின் போக்குகள், படைப்புகளில் ஆய்வு மேற்கொண்டு வரும் ஆய்வாளர்களின் விவரங்கள் முதலானவற்றைப் பரிமாறிக் கொள்ளுதல்

3. **இரு தரப்பினருக்குமான இணைப்பு அதிகாரிகளின் விவரங்கள்:** இரு நிறுவனங்களுக்குமிடையே ஒத்துழைப்பு மிக அவசியம். அதற்காக இருதரப்பிலும் இணைப்பு அதிகாரிகளை நியமித்துக் கொள்வது கட்டாயமாகும். அப்போதுதான் உறவு சீர்படும்.

தாகூர் அரசு கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறையின் சார்பில் **முனைவர் ஆ. விஜயராணி உதவிப்பேராசிரியர்,** உலகத் தமிழ்ப் பேரவையின் சார்பில் **கலைமாமணி முனைவர் ஔவை. நிர்மலா செயலர்,** புதுச்சேரி ஆகியோர் நியமிக்கபட்டுள்ளனர்.

4. **இரகசியத்தன்மை:** இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி இரு நிறுவனங்களும் இணைந்து செயல்படுவது உறுதி செய்யப்படுவதுடன் அவ்வப்போது பகிரப்படும் அனைத்துத் தகவல்களும் தரவுகளும் இரகசியமாகப் பாதுக்காக்கப்பட வேண்டும். இருவரின் எழுத்துப்பூர்வமான ஒப்புதல் இல்லாமல் எந்தத் தகவல்களும் பொது வெளியில் வெளியிடக் கூடாது. புரிந்துணர்வு ஒப்பந்தம் முடிவடைந்தபோதும் இரகசியம் காக்கப்பட வேண்டும்.

5. **அறிவுசார் சொத்துரிமைகள் (Intellectual Property Rights):** தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் உலகத் தமிழ்ப் பேரவையினர் அறிவுசார் சொத்துரிமைகளை மதிக்க ஒப்புக் கொள்கிறார்கள். இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் எந்தவொரு கூட்டு முயற்சியில் உருவாக்கப்படும் அறிவுசார் சொத்துரிமைகளும் இரு நிறுவனத்தின் தகுதிப்பாட்டைக் குறைத்துவிடக் கூடிய வகையில் அமைதல் கூடாது.

**பகுதி:** 5 நிதித்தேவையை இரு நிறுவனங்களும் இணைந்து செயல்பட்டுப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகள், இன்ன பிறவற்றுக்கான கட்டணம் இரு நிறுவனங்களின் விதிமுறைகளின்படி நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். இருதரப்பினரும் எழுத்துப்பூர்வமான அறிவிப்புகளைச் செய்து அனைத்தையும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

**பகுதி : 6 புரிந்துணர்வு ஒப்பந்தம் நிறைவடையும் காலம்**

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் இரு நிறுவனங்களின் பிரதிநிதிகளால் கையெழுத்திடப்பட்ட நாளிலிருந்து நடைமுறைக்கு வரும். கையொப்பமிட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செயல்பாட்டில் இருக்கும். ஒப்பந்தம் மீண்டும் தொடர விரும்பினால் இரு நிறுவன உறுப்பினர்களுக்கும் புரிதல் மற்றும் மதிப்பாய்வுக்குப்பின் தொடரலாம். இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முறித்துக் கொள்ள விரும்பினால் ஆறு மாதங்களுக்கு முன்னர் எழுத்துப்பூர்வ அறிவிப்பை வழங்க வேண்டும்.



Scanned by CamScanner

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்த நகல் இரு நிறுவனங்களுக்கும் வழங்கப்படுகிறது.

தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
புதுச்சேரி (சார்பில்)

உலகத் தமிழ்ப் பேரவை
புதுச்சேரி (சார்பில்)

முனைவர் சசிகாந்த தாஸ்
முதல்வர்
தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல்
கல்லூரி, புதுச்சேரி.

முனைவர் நிக்கி கிருட்டினமூர்த்தி
தலைவர்
உலகத் தமிழ்ப் பேரவை
எண்: 53, முத்துமாரியம்மன் கோயில் தெரு,
நாவற்குளம்,
இலாசுப்பேட்டை,
புதுச்சேரி – 605 008.
தொலைபேசி எண்: 9345005865

முனைவர் க. ரேவதி
உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர்
தமிழ்த்துறை
தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
புதுச்சேரி – 605008.

கலைமாமணி முனைவர் ஔவை நிர்மலா
செயலர்,
உலகத் தமிழ்ப் பேரவை,
எண்: 53, முத்துமாரியம்மன் கோயில் தெரு,
நாவற்குளம்,
இலாசுப்பேட்டை,
புதுச்சேரி – 605 008.
தொலைபேசி எண்: 9442496242

முனைவர் ஆ. விஜயராணி
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை,
தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
புதுச்சேரி – 605008.

நாள்:

சாட்சிகள்:

முனைவர்: ஆர். வேலுராஜ்,
உதவிப்பேராசிரியர் மற்றும் தலைவர்
கூட்டுறவு மேலாண்மைத்துறை, உள்தர மேம்பாட்டு அமைப்பின் (IQAC)
ஒருங்கிணைப்பாளர், தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
புதுச்சேரி – 605008.



Scanned by CamScanner

தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி

புதுச்சேரி

தமிழ்த் துறை

&

**உலகத் தமிழ்ப் பேரவை**

**நிகழ்த்தும்**

**நவீன கவிதை இலக்கிய பயிற்சிப்பட்டறை**

**நாள்:** 18.04.2023 **இடம்:** சுப்பிரமணிய பாரதியார் கருத்தரங்கக் கூடம்

**நேரம்:** காலை 10 மணி

**நிகழ்ச்சி நிரல்**

**தமிழ்த் தாய் வாழ்த்து:** முனைவர் இரா. அகிலா

**வரவேற்புரை:** முனைவர் க. ரேவதி
தமிழ்த் துறைத் தலைவர்

**நோக்கவுரை:** முனைவர் ந. காயத்ரி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை

**தலைமையுரை:** முனைவர் சசிகாந்த தாஸ்
முதல்வர், தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி.

## பயிலரங்க அமர்வு

## முற்பகல் 11. 00 மணி

**அமர்வு - 1:** முனைவர் ஞா. ஞானகுரு

உதவிப் பேராசிரியர்,

**தலைப்பு :** *புதுக்கவிதை தோற்றமும் வளர்ச்சியும்*

**அமர்வு - 2:** முனைவர் இரா. அவ்வை நிர்மலா

மேனாள் தமிழ்த்துறைத் தலைவர்,

காஞ்சி மாமுனிவர் பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்

**தலைப்பு:** *ஹைக்கூ, சென்ட்ரியூ*

## உணவு இடைவேளை

## பிற்பகல் 2.00 மணி

**அமர்வு - 3:** முனைவர் நிக்கி. கிருட்டினமூர்த்தி

தலைவர், உலகத் தமிழ்ப் பேரவை

**தலைப்பு:** *தன்முனைப்புக் கவிதை*

**அமர்வு - 4:** முனைவர் ஆ. கிருஷ்ணகுமார்

உதவிப் பேராசிரியர்,

காஞ்சி மாமுனிவர் பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்

**தலைப்பு:** *லிமரைக்கூ*

**பின்னூட்டம்:** தமிழ்த்துறை மாணவர்கள்

**நன்றியுரை:** முனைவர் ஆ. விஜயராணி

**நிகழ்ச்சித் தொகுப்பு:** முனைவர் க. கண்ணன்

**புதுச்சேரி அரசு**
**தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, புதுச்சேரி-08**
**தமிழ்த் துறை**
**&**
**உலகத் தமிழ்ப் பேரவை**
**நிகழ்த்தும்**
**"நவீன கவிதை இலக்கிய பயிற்சிப் பட்டறை"**

புதுச்சேரி தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரித் தமிழ்த் துறையில் உலகத் தமிழ்ப் பேரவை நிகழ்த்திய "நவீன கவிதை இலக்கிய பயிற்சிப் பட்டறை" 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் 18 ஆம் நாள் முற்பகல் 10.00 மணிக்கு சுப்பிரமணிய பாரதியார் கருத்தரங்கக் கூடத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில் முனைவர் இரா. அகிலா அவர்கள் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாட நிகழ்ச்சி இனிதே தொடங்கியது.

தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் க. ரேவதி அவர்கள் வரவேற்புரை வழங்கினார். முனைவர் ந. காயத்ரி அவர்கள் நோக்கவுரை வழங்கினார். தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் சசிகாந்ததாஸ் அவர்கள் தலைமையுரை வழங்கி விழாவைச் சிறப்பித்தார்.

தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழ்த் துறை பேராசிரியர் முனைவர் ஞா. ஞானகுரு "*புதுக்கவிதை தோற்றமும் வளர்ச்சியும்* " எனும் பொருண்மையிலும், காஞ்சி மாமுனிவர் அரசு பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் மேனாள் தமிழ்த் துறைத் தலைவர் கலைமாமணி முனைவர் அவ்வை. நிர்மலா "ஹக்கூ, சென்ட்ரியூ" எனும் பொருண்மையிலும், உலகத் தமிழ்ப் பேரவையின் தலைவர் முனைவர் நிக்கி. கிருட்டினமூர்த்தி "தன்முனைப்புக் கவிதை" எனும் பொருண்மையிலும் காஞ்சி மாமுனிவர் அரசு பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் தமிழ்த் துறைப் பேராசிரியர் முனைவர் ஆ. கிருஷ்ணகுமார் "லிமரைக்கூ" எனும் பொருண்மையிலும் சிறப்புரை நிகழ்த்தினர்.

பயிலரங்கம் குறித்த பின்னூட்டத்தினை தமிழ்த்துறை மாணவர்கள் வழங்கினர். நிறைவாக நன்றியுரையைப் பேராசிரியர் முனைவர் ஆ.

விஜயராணி அவர்கள் வழங்கினார். தமிழ்த்துறை பேராசிரியர் முனைவர் க. கண்ணன் அவர்கள் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். இவ்விழாவில் தமிழ்த்துறைப் பேராசிரியர்களும் மாணவர்களும் கலந்துக்கொண்டனர். நாட்டுப்பண்ணோடு விழா இனிதே நிறைவுற்றது.









# புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU)

தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
புதுச்சேரி.
புதுவைத் தமிழ்ச் சான்றோர் பேரவை
புதுச்சேரி.

# படைப்பிலக்கியப் பயிற்சி அளிப்பதற்காக ஏற்படுத்தப்படும் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU)

Scanned by CamScanner

தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, புதுச்சேரி

மற்றும்

புதுவைத் தமிழ்ச் சான்றோர் பேரவை

இடையே

படைப்பிலக்கியப் பயிற்சி அளிப்பதற்காக

ஏற்படுத்தப்படும் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU)

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மார்ச்சு 2023 - இல் தாகூர் அரசு கலை அறிவியல் கல்லூரி **முதல்வர் முனைவர் சசிகாந்த** தாஸ் அவர்களால் முன்மொழியப்பட்டு **முனைவர் க. ரேவதி, முனைவர் ஆ. விஜயராணி** ஆகியோர் கல்லூரி பிரதிநிதிகளாகவும்

புதுச்சேரி, புதுவைத் தமிழ்ச் சான்றோர் பேரவையின் **தலைவர் முனைவர் நெய்தல் நாடன், முனைவர். அரங்க** முருகையன் உதவிப்பேராசிரியர், புதுவைத் தமிழ்ச்சான்றோர் பேரவை, புதுச்சேரி அமைப்புப் பிரதிநிதிகளாகவும் இருந்து ஏற்படுத்தப்படுகிறது.

இவ்விரு அமைப்பினரும் ஒரு பொது கருத்தின் அடிப்படையில் இணைந்து செயல்பட தீர்மானிக்கப் பெறுகிறது. இரு அமைப்பினருக்கும் எந்த வகையான கருத்து முரண்பாடுகளும் ஏற்படாதவாறும் அவ்வாறு முரண்பாடு ஏற்படும்போது அவ்வப்போது பேசித் தீர்த்துக்கொண்டு சுமூகமாகச் செயல்படுவது எனவும் முடிவு செய்யப் பெறுகிறது.

இனி, புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்துவது தொடர்பாக வழிகாட்டு நெறிமுறைகள் வரையறுத்துக் கொள்ளப்படுகிறது.

**பகுதி – 1 புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ள உள்ள நிறுவனங்களின் சுருக்கமான விவரம்,**

**புதுச்சேரி மாநிலத்தில் தாகூர் அரசு கலை அறிவியல் கல்லூரி** ஒரு முதன்மையான கல்வி நிறுவனமாக இயங்கி வருகிறது. 1961-ஆம் ஆண்டு பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் பொற்கரங்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, கல்லூரி இன்று பரந்து விரிந்த ஓர் ஆலமரமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. 1986-87-ஆம் கல்வியாண்டிலிருந்து புதுவைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப் பெற்று இயங்கி வருகிறது. அதற்கு முன் சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்திருந்தது. 2015-ஆம் ஆண்டில் தேசிய தரக்கட்டுப்பாட்டு நிறுவனத்தின் (NAAC) 'B' அங்கீகாரம் பெற்றுள்ளது.

நவீன அறிவியல் வளர்ச்சியை மாணவர்களுக்கு அறிவுறுத்தும் வகையிலும் ஆன்மீக விழுமியங்களை வலியுறுத்தும் நோக்கிலும் இக்கல்லூரி செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

**புதுச்சேரியில் தமிழ்ச் சான்றோர் பேரவை** தமிழ் அறிஞர் பெருமக்களால் பாராட்டுப் பெற்ற நிறுவனமாகச் செயல்பட்டு வருகிறது. இளைய தலைமுறையினருக்குத் தமிழ் வளர்ச்சிக்கான அடிப்படையைச் சுட்டிக்காட்டி வருகிறது.

புதுச்சேரியில் இயங்கி வரும் பள்ளிகள், கல்லூரிகளில் பயின்று வரும் மாணவர்களிடையே பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. கலைத்திறன் போட்டிகள் பலவற்றை நடத்தி பல்வேறு பரிசுகளை வழங்கி வருகிறது.



Scanned by CamScanner

பல்வேறு இலக்கிய வகைமைகளைப் படைப்பதற்கான பயிற்சிகளையும் அளித்து வருகிறது. அத்துடன் தமிழ் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. தமிழ்ப் பற்றாளர்களாக இளைஞர்களை உருவாக்க வேண்டும் என்பது தலையாய கடமையாகச் செய்து வருகிறது.

**பகுதி – 2: புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நோக்கம்**

- மாணவர்களுக்குப் படைப்பிலக்கியப் பயிற்சியளித்து அவர்களைப் படைப்பாளர்களாக, எழுத்தாளர்களாக உருவாக்குதல்
- பல்வேறு கலைத்திறன் போட்டிகளை நடத்தி தனித்திறன் மிக்கவர்களாக மாணவர்களை உருவாக்குதல்.
- ஆய்வு மனப்பான்மையை வளர்த்து சிறந்த ஆய்வாளர்களாகத் தகுதிப்படுத்துதல்
- தமிழைப் பிழையின்றி எழுதவும் பிழையின்றி பேசவும் பயிற்சி அளித்தல்
- தமிழ் மொழி உலகின் மூத்த மொழி, உயர்தனிச் செம்மொழி, செவ்வியல் இலக்கியங்கள் உலகில் எம்மொழியிலும் இல்லாத சிறப்புடையவை. இவை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- சிறுகதை, நாடகம், புதுக்கவிதை, மரபுக் கவிதை போன்றவற்றை எழுத மாணவர்களைத் தயார்ப்படுத்துதல், எழுத வைத்தல்.

**பகுதி – 3: இரு நிறுவனங்களின் பொறுப்பு மற்றும் முன்மாதிரிச் செயல்பாடு**

**தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி**

1. அடிப்படைத்திறன்களான எழுதுதல், கற்றல், பேசுதல் முதலானவற்றை வளர்த்துக் கொள்ள பயிற்சியளிக்கும் திட்டங்கள்
2. பயிற்சிகள் வழங்குவதற்காக கல்லூரிக் கருத்தரங்கக் கூடத்தைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதி வழங்குவதன் மூலம், மாணவர்களைப் பங்கு கொள்ளச் செய்து இணைந்து செயல்படுதல்.
3. இரு நிறுவனங்களின் செயல்பாடுகளும் ஒரு முன் மாதிரியாக விளங்க வகை செய்தல். சமூகப் பொறுப்புணர்ந்து அதற்கேற்ற திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்துதல்.

**தமிழ்ச் சான்றோர் பேரவை:**

1. பேரவையின் அங்கத்தினர்கள் மாணவர்களுக்குப் படைப்பிலக்கியப் பயிற்சியளிக்க (மரபுக்கவிதை) அறிவுக்கொடையை வழங்குதல்
2. மாணவர்களின் படைப்புகளை நூல்களாகவோ இதழ்களின் மூலம் வெளியிடவோ வழி வகை செய்தல்.
3. அவ்வப்போது மாணவர்களைச் சந்தித்து கலந்துரையாடுவது. இதன் மூலம் மாணவர்களின் ஒழுக்கம் மேம்பட வழிவகை செய்வது. தம் பட்டறிவை எடுத்துக் கூறி நெறிப்படுத்துதல்.

Scanned by CamScanner

**பகுதி – 4: புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பகுதிகள்**

1. **பயிற்சி மற்றும் சான்றிதழ்**: தாகூர் அரசு கலை அறிவியல் கல்லூரி, புதுவைத் தமிழ்ச் சான்றார் பேரவை இணைந்து படைப்பிலக்கியப் பயிற்சியளித்து, பயிற்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ் வழங்குதல்.

2. **தகவல் பரிமாற்றம்**: மரபிலக்கிய படைப்புகள், அண்மைக் கால படைப்பாளர்களின் படைப்புகள், படைப்புகளின் போக்குகள், படைப்புகளில் ஆய்வு மேற்கொண்டு வரும் ஆய்வாளர்களின் விவரங்கள் முதலானவற்றைப் பரிமாறிக் கொள்ளுதல்

3. **இரு தரப்பினருக்குமான இணைப்பு அதிகாரிகளின் விவரங்கள்**: இரு நிறுவனங்களுக்குமிடையே ஒத்துழைப்பு மிக அவசியம். அதற்காக இருதரப்பிலும் இணைப்பு அதிகாரிகளை நியமித்துக் கொள்வது கட்டாயமாகும். அப்போது தான் உறவு சீர்படும்.

தாகூர் அரசு கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறையின் சார்பில் முனைவர் **ஆ. விஜயராணி** உதவிப்பேராசிரியர், தமிழ்ச்சான்றோர் பேரவையின் சார்பில் **முனைவர்.அரங்க.முருகையன்,** உதவிப்பேராசிரியர், புதுச்சேரி, ஆகியோர் நியமிக்கப் பட்டுள்ளனர்.

4. **இரகசியத்தன்மை**: இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி இரு நிறுவனங்களும் இணைந்து செயல்படுவது உறுதி செய்யப்படுவதுடன் அவ்வப்போது பகிரப்படும் அனைத்துத் தகவல்களும் தரவுகளும் இரகசியமாகப் பாதுகாக்கப்பட வேண்டும். இருவரின் எழுத்துப்பூர்வமான ஒப்புதல் இல்லாமல் எந்தத் தகவல்களும் பொது வெளியில் வெளியிடக் கூடாது. புரிந்துணர்வு ஒப்பந்தம் முடிவடைந்த போதும் இரகசியம் காக்கப்பட வேண்டும்.

5. **அறிவுசார் சொத்துரிமைகள் (Intellectual Property Rights):** தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் தமிழ்ச் சான்றோர் பேரவையினர் அறிவுசார் சொத்துரிமைகளை மதிக்க ஒப்புக் கொள்கிறார்கள். இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் எந்தவொரு கூட்டு முயற்சியில் உருவாக்கப்படும் அறிவுசார் சொத்துரிமைகளும் இரு நிறுவனத்தின் தகுதிப்பாட்டைக் குறைத்துவிடக் கூடிய வகையில் அமைதல் கூடாது.

**பகுதி**: 5 நிதி தேவையை இரு நிறுவனங்களும் இணைந்து செயல்பட்டுப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகள், இன்ன பிறவற்றுக்கான கட்டணம் இரு நிறுவனங்களின் விதிமுறைகளின்படி நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். இருதரப்பினரும் எழுத்துப்பூர்வமான அறிவிப்புகளைச் செய்து அனைத்தையும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

**பகுதி : 6 புரிந்துணர்வு ஒப்பந்தம் நிறைவடையும் காலம்**

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் இரு நிறுவனங்களின் பிரதிநிதிகளால் கையெழுத்திடப்பட்ட நாளிலிருந்து நடைமுறைக்கு வரும். கையொப்பமிட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செயல்பாட்டில் இருக்கும். ஒப்பந்தம் மீண்டும் தொடர விரும்பினால் இரு நிறுவன உறுப்பினர்களுக்கும் புரிதல் மற்றும் மதிப்பாய்வுக்குப்பின் தொடரலாம். இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முறித்துக் கொள்ள விரும்பினால் ஆறு மாதங்களுக்கு முன்னர் எழுத்துப்பூர்வ அறிவிப்பை வழங்க வேண்டும்.

Scanned by CamScanner

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்த நகல் இரு நிறுவனங்களுக்கும் வழங்கப்படுகிறது.

தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
புதுச்சேரி (சார்பில்)

புதுவைத் தமிழ்ச் சான்றோர் பேரவை
புதுச்சேரி (சார்பில்)

முனைவர் சசிகாந்த தாஸ்
முதல்வர்
தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல்
கல்லூரி, புதுச்சேரி.

முனைவர் நெய்தல் நாடன்
தலைவர்
புதுவைத் தமிழ்ச்சான்றோர் பேரவை
எண்: 35, பங்களா தெரு,
பெரிய காலாப்பட்டு,
புதுச்சேரி – 605 014.
தொலைபேசி எண்: 9442031129

முனைவர் க. ரேவதி
உதவிப்பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர்
தமிழ்த்துறை
தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
புதுச்சேரி – 605008.

முனைவர். அரங்க முருகையன்,
உதவிப்பேராசிரியர்,
புதுவைத் தமிழ்ச் சான்றோர் பேரவை
எண்: 18, பாடசாலை வீதி,
இடையார்பாளையம்,
பூரணாங்குப்பம் சாலை & அஞ்சல்,
புதுச்சேரி – 605 007.

முனைவர் ஆ. விஜயராணி
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை,
தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
புதுச்சேரி – 605008.

நாள்:

சாட்சிகள்:

முனைவர்: ஆர். வேலுராஜ்,
உதவிப்பேராசிரியர் மற்றும் தலைவர்
கூட்டுறவு மேலாண்மைத்துறை, உள்தர மேம்பாட்டு அமைப்பின் (IQAC)
ஒருங்கிணைப்பாளர், தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
புதுச்சேரி – 605008.



Scanned by CamScanner

Government of Puducherry

## தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி

## புதுச்சேரி

## தமிழ்த் துறை

## &

## புதுவைத் தமிழ்ச் சான்றோர் பேரவை

## நிகழ்த்தும்

## “படைப்பிலக்கியப் பயிற்சி”

**நாள்:** 30.08.2023 **இடம்:** சுப்பிரமணிய பாரதியார் கருத்தரங்கக் கூடம்

**நேரம்:** காலை 10 மணி

### நிகழ்ச்சி நிரல்

**தமிழ்த் தாய் வாழ்த்து:** தமிழ்த்துறை மாணவர்கள்

**வரவேற்புரை:** முனைவர் க. ரேவதி
தமிழ்த்துறைத் தலைவர்

**நோக்கவுரை:** முனைவர் ஆ. விஜயராணி
உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை

**தலைமையுரை:** முனைவர் சசிகாந்த தாஸ்
முதல்வர், தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி.

## பயிலரங்க அமர்வு

## முற்பகல் 11.00 மணி

**அமர்வு - 1:** முனைவர் க. கண்ணன்

உதவிப் பேராசிரியர்,

**தலைப்பு** : *யாப்பும் மரபும்*

**அமர்வு - 2:** முனைவர் நெய்தல் நாடன்

தலைவர், புதுவைத் தமிழ்ச் சான்றோர் பேரவை

**தலைப்பு:** *வெண்பா - ஆசிரியப்பா ஓர் அறிமுகம்*

## உணவு இடைவேளை

## பிற்பகல் 2.00

**அமர்வு - 3:** முனைவர் அரங்க. முருகையன்

உதவிப் பேராசிரியர், புதுவைப் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி, புதுச்சேரி

**தலைப்பு:** *கலிப்பா - வஞ்சிப்பா ஓர் கண்ணோட்டம்*

**அமர்வு - 4:** முனைவர் தி. தாமரைச்செல்வி

உதவிப் பேராசிரியர்,

**தலைப்பு:** *விருத்தப்பா ஓர் விளக்கம்*

**பின்னூட்டம்:** தமிழ்த்துறை மாணவர்கள்

**நன்றியுரை:** முனைவர் நா. ராணி,

உதவிப் பேராசிரியர்

**நிகழ்ச்சித் தொகுப்பு:** திரு. இரா. கோவலன்

உதவிப் பேராசிரியர்

**புதுச்சேரி அரசு**
**தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, புதுச்சேரி-08**
**தமிழ்த் துறை**
**&**
**புதுவைத் தமிழ்ச் சான்றோர் பேரவை**
**நிகழ்த்தும்**
**“படைப்பிலக்கியப் பயிற்சி”**

புதுச்சேரி தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரித் தமிழ்த் துறையில் புதுவைத் தமிழ்ச் சான்றோர் பேரவை நிகழ்த்தும் “படைப்பிலக்கியப் பயிற்சி” 30.08.2023 அன்று காலை 10.00 மணிக்கு சுப்பிரமணிய பாரதியார் கருத்தரங்கக் கூடத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில் தமிழ்த் துறை மாணவர்கள் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாட நிகழ்ச்சி இனிதே தொடங்கியது.

தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் க. ரேவதி அவர்கள் வரவேற்புரை வழங்கினார். தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் ஆ. விஜயராணி அவர்கள் நோக்கவுரை வழங்கினார். தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் சசிகாந்ததாஸ் அவர்கள் தலைமையுரை வழங்கி விழாவைச் சிறப்பித்தார்.

தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறை பேராசிரியர் முனைவர் க. கண்ணன் “யாப்பும் மரபும்” எனும் பொருண்மையிலும், புதுவைத் தமிழ்ச் சான்றோர் பேரவைத் தலைவர் முனைவர் நெய்தல் நாடன் “வெண்பா - ஆசிரியப்பா ஓர் அறிமுகம்” எனும் பொருண்மையிலும், புதுவைப் பல்கலைக் கழக உறுப்புக் கல்லூரியின் உதவிப் பேராசிரியர் முனைவர் அரங்க. முருகையன் “கலிப்பா - வஞ்சிப்பா ஓர் கண்ணோட்டம்” எனும் பொருண்மையிலும், தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் தி. தாமரைச்செல்வி “விருத்தப்பா ஓர் அறிமுகம்” எனும் பொருண்மையிலும், பயிலரங்க அமர்வில் சிறப்புரை நிகழ்த்தினர்.

படைப்பிலக்கியப் பயிற்சி குறித்து தமிழ்த் துறை மாணவர்கள் பின்னூட்டம் வழங்கினர். நிறைவாக நன்றியுரையைப் பேராசிரியர்

முனைவர் நா. ராணி அவர்கள் வழங்கினார். தமிழ்த் துறை பேராசிரியர் திரு. இரா. கோவலன் அவர்கள் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். இவ்விழாவில் தமிழ்த்துறைப் பேராசிரியர்களும் மாணவர்களும் கலந்துக்கொண்டனர். நாட்டுப்பண்ணோடு விழா இனிதே நிறைவுற்றது.







